செய்தி வெளியீடு எண்:576 நாள்:16.07.2008

# 16.7.2008 அன்று நடைபெற்ற அமைச்சரவையின் 29வது கூட்ட முடிவுகள்

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (16.7.2008) மாலை அமைச்சரவையின் இருபத்தி ஒன்பதாவது கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:–

14.7.2008 அன்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நீதியரசர் சண்முகம் அவர்கள் அளித்த தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்தது தொடர்பான விசாரணை அறிக்கை குறித்து அமைச்சர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த விசாரணை கமிஷன் சட்டமன்றத்திலே அறிவிக்கப் பட்ட ஒன்று என்பதால் அடுத்த சட்டமன்றக் கூட்டம் நடைபெறும்போது அந்த அறிக்கையினை பேரவையிலே வைப்பதென்றும் – நீதிபதி சண்முகம் அவர்கள் அந்த அறிக்கை குறித்து அரசின் சார்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு அது குறித்த விவரங்களையும் பேரவையிலே வைப்பதென்றும் அமைச்சரவையிலே முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து எதிர்பார்த்த அளவு மழை பெய்யாததன் காரணமாக மின் பற்றாக்குறை அதிகரித்துள்ள நிலையில் இதனை எப்படி சீர் செய்வது என்பது குறித்து அமைச்சரவையிலே நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. இறுதியாக நாளை மறுநாள் தமிழகத்திலே உள்ள முக்கிய தொழிலதிபர்களை எல்லாம் அழைத்துப் பேசி மின் பற்றாக்குறை நிலையை எப்படி நிர்வகிப்பது என்று முதலமைச்சருடன் கலந்து பேசி முடிவெடுத்து அறிவிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு, ரவை மற்றும் மைதா ஆகிய பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் தொடர்ந்து வழங்குவது பற்றி இன்றைய அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு, இந்தத் திட்டத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு தொடருவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அரசாணை நிலை எண். 161, வணிக வரித் துறை, நாள் 13.10.2000இல் டைடல் பூங்காவில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு எழுதிக் கொடுக்கப்படும் விற்பனை மற்றும் குத்தகை ஆவணங்களுக்கு முத்திரை தீர்வை விலக்களித்து வெளியிடப்பட்ட அறிவிக்கை; பிரிக்கப் படாத அடி மனைக்கும் பொருந்தும் பொருட்டு தக்க திருத்தம் செய்யலாம் என்று அமைச்சரவை முடிவு செய்தது.

இந்தியத் தொழில் நுட்ப ஆராய்ச்சி பூங்கா அமைப்பதற்கு சென்னை இந்திய தொழில் நுட்ப நிறுவனத்திற்கு (ஐ.ஐ.டி., சென்னை) வழங்கப்பட்ட 11.42 ஏக்கர் நிலத்திற்கு பத்தாண்டுகளுக்கு ஆண்டுக் குத்தகையாக ஆயிரம் ரூபாய்

நிர்ணயம் செய்வதென்றும், பத்தாண்டுகளுக்குப் பிறகு பெறப்படும் மொத்தக் குத்தகையில் இரண்டு சதவிகிதம் ஆண்டுக் குத்தகையாக நிர்ணயிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

1989ஆம் ஆண்டு வரை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு சாலைகள் மேம்பாடு மற்றும் புதிய பாலங்கள் கட்டுவதற்காக அரசு செலவு செய்த தொகையில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையை தள்ளுபடி செய்வதுடன் 1990 முதல் 1998 வரையில் செலுத்த வேண்டிய பங்குத் தொகையையும் தள்ளுபடி செய்வதென வும் மேலும் அதற்குப் பிந்தைய ஆண்டுகளுக்கும் இனி வரும் ஆண்டு களுக்கும் அத்தகைய பங்குத் தொகையை வசூலிக்க வேண்டியதில்லை எனவும் அமைச்சரவை இன்று முடிவு செய்தது. மேலும் இது தொடர்பாக விதிகளில் தக்க திருத்தங்களையும் மேற்கொள்ளலாம் எனவும் முடிவு செய்யப் பட்டது.

தமிழ்நாடு மலைப் பகுதிகள் (மரங்களைப் பாதுகாத்தல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு தனியார் வனப் பாதுகாப்புச் சட்டம், 1949இல் உள்ள விதி 2–ஏ. க்கு திருத்தம் வெளியிட எடுக்கப்படும் நடவடிக்கையினை கைவிடலாம் என்றும், ஏற்கனவே நிலவி வரும் நிலையினைத் தொடர்ந்து நீடிக்கலாம் என்றும் அமைச்சரவை முடிவு செய்கிறது.

***

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9